*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*21 01 2026 WEDNESDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியாவும் ஸ்பெயினும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.*

*2. அடல் ஓய்வூதிய திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

*3. நாட்டின் வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளுக்கு 6 முதல் 8 சதவீதமாக இருக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்*

*4. ஜனநாயகத்தின் அன்னையாக இந்தியா திகழ்கிறது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar கூறியுள்ளார்.*

*5. இந்தியா - நியூஸிலாந்து இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி நாக்பூரில் சற்றுமுன் தொடங்கியது.*

*>>>>><<<<<*

*தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியாவும் ஸ்பெயினும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் தம்மை சந்தித்த ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் திரு. Jose Manuel Albaras-சுடன் நடத்திய பேச்சுக்களின் போது அவர் இவ்வாறு கூறினார்.*

*ஐ.நா., ஜி.20 உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிலும் இருநாடுகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டார்.*

*>>>>><<<<<*

*அடல் ஓய்வூதிய திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

*இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த திட்டத்தின் கீழ், 60 வயதை பூர்த்தி செய்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, அவர்களது பங்களிப்பை பொறுத்து, மாதந்தோறும் ஆயிரம் முதல் ஐயாயிரம் ரூபாய் வரை ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.*

*இதுவரை 8 கோடியே 66 லட்சம் பேர் இந்த திட்டத்தில் இணைந்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இதன்மூலம், இந்த திட்டம், குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு சிந்தனைக்கு அமைச்சரவையின் இந்த முடிவு மேலும் வலுசேர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

நாட்டின் வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளுக்கு 6 முதல் 8 சதவீதமாக இருக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

Davos-ல் நடைபெற்று வரும் உலக பொருளதார அமைப்பின் வருடாந்திரக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று அவர் கூறினார்.

பணவீக்கமும் கட்டுக்குள் உள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

மருத்துவக் கல்வியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த இணையதள பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் குறித்து, 50 ஆயிரம் மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ் பயிற்சி பெற 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இதுவரை பதிவு செய்துள்ளதாகவும் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

>>>>><<<<<

வரைவு தேசிய மின்கொள்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக பொதுமக்களும், சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்களும் கருத்துக்களை தெரிவிக்குமாறு மின்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எதிர்காலத் தேவையை கருத்தில் கொண்டு, சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு உகந்த மின்துறையின் வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கில் இந்த வரைவு கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஜனநாயகத்தின் அன்னையாக இந்தியா திகழ்கிறது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

செம்மையான வாக்காளர் பட்டியலை தயாரிப்பது, தகுதியுள்ள வாக்காளர்களை பட்டியலில் சேர்ப்பது, ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளாகும் என்று அவர் கூறினார்.

தேர்தல் செயல்பாடுகளில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக திரு. Gyanesh Kumar தெரிவித்தார்.

>>>>><<<<<

பிஜேபி தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு. நிதின் நபின், இன்று புதுதில்லியில் கட்சியின் நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழகம், மேற்குவங்கம் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்களில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் தொடர்பாக, எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் தவறான தகவல்களை முறியடிப்பதற்கான அம்சங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அந்த செய்திகள் கூறுகின்றன.

>>>>><<<<<

காவல்துறை சார்பில் நடத்தப்படும் பத்திகையாளர் சந்திப்பிற்கான ஒருங்கிணைந்த கொள்கையை வகுக்குமாறு உச்சநீதிமன்றம் மாநில அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. சுந்தரேஷ், திரு. கோட்டீஸ்வர் சிங் அமர்வு, இதற்கான அறிவுறுத்தலை வழங்கியது.

வழக்கு தொடர்பான விசாரணை நடைபெற்று வரும் போது, காவல்துறை பத்திரிகையாளர் சந்திப்பு நடத்துவதற்கான நெறிமுறைகள் இதில் இடம்பெற வேண்டும் என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு குறித்த கொள்கைக்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஜெய்ப்பூரில் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளரிடம் தெரிவித்த அம்மாநில தொழில்துறை அமைச்சர் திரு. ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், சிறு குறு தொழில் வளர்ச்சிக்கு இது உதவிடும் என்று கூறினார்.

>>>>><<<<<

கர்நாடக சட்டப்பேரவை கூட்டத் தொடரில் உரையாற்றப் போவதில்லை என்று அம்மாநில ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட் கூறியுள்ளார்.

இதுகுறித்த முடிவினை ஆளுநர் அரசுக்கு தெரிவித்துள்ளதாக அதிகார வட்டாரங்களை மேற்கோள் காட்டி, ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இந்தக் கூட்டத்தில் ஆளுநர் பங்கேற்று உரையாற்றுவார் என்று அம்மாநில சட்ட அமைச்சர் திரு. எச். கே. பாட்டீல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கர்நாடக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

>>>>><<<<<

ஹிமாச்சலப்பிரதேசத்தில் ஹெலிகாப்டர் சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. Sukhvinder Singh Sukhu இன்று தொடங்கி வைத்தார்.

சிம்லாவில் உள்ள Sanjauli ஹெலிகாப்டர் தளத்திலிருந்து இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

Sanjauli-யிலிருந்து Kullu மாவட்டத்தில் உள்ள Bhuntar விமான நிலையத்திற்கு தினசரி ஹெலிகாப்டர் சேவை இயக்கப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஜப்பானில் உள்ள உலகின் மிகப் பெரிய அணு உற்பத்தி நிலையம், இன்று முதல் மீண்டும் செயல்பட தொடங்கியுள்ளது.

இயற்கை பேரிடர் காரணமாக, கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் பாதிக்கப்பட்ட இந்த அணுஉலை தற்போது செயல்பட தொடங்கியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தொடங்கியது.

நாக்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற நியூஸிலாந்து முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து பேட் செய்து வரும் இந்தியா சற்று முன்வரை 3 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 31 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை 20 -20 கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இன்று காணொலி வாயிலாக நடைபெற்ற ஐ.சி.சி-யின் வாரியக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பங்களாதேஷ் பங்கேற்கும் ஆட்டங்கள் திட்டமிட்டபடி இந்தியாவில் நடைபெறும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-11, 16-21, 21-16 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் *Wang Tzu Wei*-ஐ வென்றார்.

>>>>><<<<<

மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - *Yashaswini Ghorpade* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-6, 7-11, 10-12, 14-12, 11-8 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் *Iskender - Sarvinoz Mirkadirova* இணையை வென்றது.

மற்றொரு கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்று, *Manush Shah - Diya Chitale* இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில், *Manush Shah*-வும், மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிக்கா பத்ராவும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் நான்காவது சுற்றில் இந்தியாவின் *Praggnanandha* – குகேஷ் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

>>>>><<<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் தமிழக அணி 1-0 என்ற கோல்கணக்கில் அஸ்ஸாம் அணியை வென்றது.

அஸ்ஸாமில் இன்று தொடங்கிய இப்போட்டியின் இதர ஆட்டங்களில், ராஜஸ்தான் 3-0 என்ற கோல்கணக்கில் உத்ராகண்டையும், மேற்குவங்கம் 4-0 என்ற கோல்கணக்கில் நாகாலாந்தையும் வென்றன.

>>>>>END<<<<<